"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையந் தழைக்குமாம்"

— பாரதி

ஏப்ரல்' 85
விலை ரூபா 3-50

1

# சக்தி

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்!

கௌரி

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வார ஏடான "*Saturday Review*" வில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்த ஒரு விடயம் பலரையும் கவர்ந்திருக்கும்.

இராணுவத்தினரின் காம வெறியாட்டத்திற்கு பலியாக்கப்பட்ட தமிழ்ப் பெண்களிற்கு 'வாழ்வளிக்கும்' புண்ணிய கைங்கரியத்தை நிறைவேற்றுமாறு 'முற்போக்கு' மனம் படைத்த ஆண்களை நோக்கி அந்தச் செய்தி கோரிக்கை விடப்பட்டிருந்தது. இதுவரை ஆசிரியரிற்கு அதனைப்பற்றி எத்தனை 'கடிதங்கள்' வந்து குவிந்துள்ளனவோ எனக்குத் தெரியவில்லை! ஆனல் அந்தச் செய்தியின் தன்மையும் அதற்குப் பத்திரிகையில் கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்துவமும் எனக்கு எரிச்சலையே ஊட்டிற்று என்று சொன்னல் சிலவேளை நீங்கள் வியப்படையக் கூடும். ஆசிரியரின் நல்ல நோக்கத்தை நான் மதிக்கவில்லை என்று நீங்கள் என்னைத் திட்டக்கூடும். ஆனல்......... என்னவோ எனக்கு அந்தச் செய்தி எரிச்சலையே ஊட்டிற்று.

'அந்தப் பெண்கள் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டவர்கள் என்பதனல் 'புனிதம்' கெட்டுவிடவில்லை; அவர்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்யாததால் அவர்கள் 'புனிதமான'வர்கள் என்ற தொனி அதில் ஒலிக்கிறது. அதாவது, இந்த சமூகத்தில்—இந்தப் புண்ணிய (!) பூமியில் வாழ அவளிற்குத் தகுதி இருக்கிறது, அவளது கற்புப் பறி போயிருந்தாலும்—— என்று சொல்கிறது இந்த 'தொனி'.

ஒன்று கேட்கிறேன்; ஐயா, பெண் கற்பிழக்காமல் இருப்பது தான் அவள் இந்த (புனித) சமூகத்தில் வாழ அருகதை உள்ளவள் என்பதற்கான அடிப்படைத் தராதரமா? (*Qualification*) அப்படியானல் அது ஏன் ஆண்களிற்குக் கோரப்படுவதில்லை?

இராணுவத்தினரிற்குப் பதில் இதில் வேறு யாராவது ஈடுபட்டிருந்தால் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்படுமா?

'முற்போக்கு' மனம் படைத்தவர்களை 'தாராளமனது' வைத்து திருமணம் செய்யக் கோருகிறீர்களே, இந்தக் காடைத்தனத்தை எதிர்த்து எத்தனை 'முற்போக்காளர்கள்' குரலெழுப்பிவிட்டார்கள்..? கற்பழிக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட, வாழவழியின்றி விபசாரிகளாகிவிட்ட ஆயிரமாயிரம் சகோதரிகளிற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்....?

முற்போக்காளர்களைத் தேடிப் பிடித்து 'திருமணம்' செய்து வைக்கப் போகிறீர்களா?

இந்த 'ஆணாதிக்க' வெறிபற்றி எழுத ஏன் உங்களிற்கு முடியவில்லை.....?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரக்கம் காட்டுமாறு கேட்கும்போது உங்களிற்கே இந்த 'ஆணாதிக்கம்' — இந்தச் சமூக அமைப்பிற்குரிய பிற்போக்கு கலாச்சார வடிவங்களில் உள்ள பிடிப்பு' — தெரிகிறதே என்று நான் சந்தேகப்படுவதை மறுக்க முடியுமா?

இரக்கப்படுகின்ற அளவிற்கு என்ன தப்பு நடந்துவிட்டது? இந்த சமூக அமைப்பு ஊட்டி வளர்த்துள்ள 'முறைமைகளை' அம்பலப் படுத்த நீங்கள் தயாரா?

உங்கள் 'முற்போக்காளர்களை' இந்த நிகழ்ச்சிகளிற்கு இரக்கப்படுமாறு கேட்பதற்குப்பதில், இந்த சமூக முறைமைகளை உடைக்க வருமாறு கோருங்கள். பெண்ணடிமைத் தனத்தை எதிர்க்க வருமாறு குரல் கொடுங்கள்......... அதற்கு அர்த்தமிருக்கும்.

ஓரிருவரிற்கு தீர்வு சொல்லி இந்த சமூகத்தின் முன்னால் 'முற்போக்கு'ப் பட்டம் வாங்கிக் கொள்ளாமல் முழுமைக்கும் தீர்வு காட்டி ஒவ்வொருவரிற்கும் நீதி கிடைக்க எழுதுங்கள்......, உங்கள் எழுத்திற்கு அர்த்தமிருக்கும்......!

'கற்பழிப்பு' விசேட அர்த்தம் பெறுவதற்கான காரணம் என்ன? இந்தச் சமூகத்தில் நடைபெறும் ஆயிரமாயிரம் அங்கீகரிக்கப்பட்ட 'விபசாரத்தை'விட —மோசடிகளைவிட அதை மட்டும் ஏன் அதிக அழுத்தம் கொடுத்துப் பார்க்கிறீர்கள்....... இந்த 'விபசாரங்கள்' நாளுக்கு நாள் பெண்களை வீதிக்குத் துரத்தி விபசாரிகளாக்குகின்றதே...... இவற்றை அங்கீகரிக்கும் இந்த சமூகத்தின் அதன் கலாச்சார பண்பாட்டு வடிவங்களின் 'கற்பு' என்னாயிற்று...?

இதையிட்டுக் காறி உமிழ்வதற்குத் தயாராகாத 'முற்போக்கு'களிடமா நீங்கள் கோரிக்கை விடுக்கிறீர்கள்......?

சரி, இவர்கள் ஏற்றுக்கொண்டு திருமணம் செய்து வாழ்வளித்துவிட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம்... அதை இந்தப் புனித சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்ற தவிப்பில் நீங்கள் 'இரகசிய'மாக இதைச் செய்துவிடலாம்........ 'கற்பழிப்புகள்', 'பெண் அடிமைத்தனம்' இவையெல்லாம் ஓடிவிடப் போகிறதா என்ன?

இராமனின் பாததூளிக்காகக் காத்திருக்கும் அகலிகைகளாக, 'புனிதம்' பெறுவதற்காக இவர்கள் கல்லாய் இருக்க வேண்டும் என்ற விதி நிலவும் இந்த சமூகம் எந்தக் கங்கையில் புனிதம் பெறப் போகிறது?



❀ ———————— 2

இந்தியாவிலிருந்து பல்வேறு 'நசிவு இலக்கிய'ப் பத்திரிகைகளும் இன்று வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

ஈழத்து இலக்கிய வாதிகள், எழுத்தாளர்கள் எல்லோரும் வரிந்து கட்டிக்கொண்டு 'எழுதினார்கள்'.

பிறகு,

வாய்ப்புக் கிடைத்தால் அவற்றிலும் தங்கள் பெயர் வரச்செய்யும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

இப்போது,

இந்த 'நசிவு இலக்கிய'க் குப்பைகள் 'வாரிவழங்கும்' சாக்கடை எழுத்துக்களையிட்டு எமது எழுத்தாளர்கள் எதுவும் பேசுவதில்லை.

போகட்டும்! அவர்களிற்கு எவ்வளவு சோலி இருக்கும். இந்த சமூகத்தைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ அக்கறைப்படவோ அதற்காக 'மினைக்கெடவோ' முடியுமா என்ன... ...?

இந்த இறக்குமதிக் குப்பைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு இங்கும் 'மாதர் இதழ்கள்' வந்தன. 'பெண்களிற்கான பகுதி' (தாய்க்குலத்திற்குத் தனியிடம்!) கொண்ட பத்திரிகைகளும் வருகின்றன. வானொலி கூட "பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி" நடாத்துகிறது. (பூவும் பொட்டுமில்லாவிட்டால் அவள் மங்கையா என்ன...... விதவையல்லவா? !)

இதிலே பெண்களிற்காக வருகின்ற பிரதான அம்சங்கள் இவை தான்:

1. அழகுக் குறிப்புக்கள் (உங்கள் அபிமான நடிகை வழங்குவது)

2. விருந்தினரை உபசரிப்பது எப்படி? (சில வேளைகளில் விருந்தினரை உதைப்பது எப்படி என்றும்)

3. சமையல் குறிப்புகள்: இவ்வாரப் புது உணவு (வாரக்கணக்காகச் சாப்பாடு இல்லாமல் வாடுபவர்கள் பற்றி மறவுங்கள்)

4. தையல் வேலை; பூவேலை; புது டிசைன், கோலங்கள் போடுவது. கேக் ஐசிங்கில் நவீன உத்தி; (புதிய கண்டுபிடிப்புகளிற்குப் பரிசு உண்டு)

5. குடும்பத்தில் கணவனைச் சமாளிப்பது எப்படி?

(i) குடிகாரரா? — எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

(ii) உங்களிடம் சண்டை போடுவாரா?

(iii) அவரிற்குப் பிடித்தமான விடயங்களை எவ்வாறு தெரிந்து வைத்துள்ளீர்கள்... ...?

6. அந்த 'மூன்று' நாட்கள்— ஆலோசனைகள்; அபிப்பிராயங்கள்.

இந்த விடயங்களைத் தவிர, இடையிடையே 'புரட்சியாக' 'சீதனக் கொடுமை' பற்றிய விடயங்களும் வரும்:

இந்தச் சமூக அமைப்பில் பெண்களுக்குரிய 'அந்தஸ்தும்' அவர்களிற்குரிய 'தகுதியும்' மிகவும் தெளிவாகக் காட்டப்படுவது இவற்றிலேதான்:

—பெரும்பாலும் இவற்றை நடாத்துபவர்களும் பெண்கள் தான்!

அதிலே ஆச்சரியப்பட ஒன்றுமில்லை: ஆணாதிக்கத்தைப் பேணும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சார வடிவில் ஆழ ஊறப போடப்பட்ட மட்டைகளாக, தம் மீதான ஒடுக்குமுறையைத் தாமே உணராமல்—— இவர்கள் இருக்கும் வரை இது வியப்புக்குரியதல்லத் தான்......

ஆனால் பெண்களைப் போகப் பொருளாகவும் பாவனைச் சொத்தாகவும் மதிக்கும் இந்த சமூகத்தையும்; அதன் கலாச்சார வடிவங்களையும் தூக்கி எறியவும், பெண்களிற்கான உரிமைகளை வென்றெடுக்கவும் பெண்கள் தயாராக நீண்டகாலம் எடுக்கப்போவதில்லை. அப்போது இந்த ஆளும் வர்க்க கலாச்சாரம் பேணும் பத்திரிகைகளையும், வானொலியையும் உதறியெறியப் பெண்கள் தயங்க மாட்டார்கள்!

அப்போது,

இந்த உலகத்தில் பெண்ணாகப் பிறப்பதே ஆணிற்கு அடிமைச் சேவை செய்யவே என்ற 'பொய்மை' விதிகளைத் தூக்கிவீசி, இந்தப் பத்திரிகைகளைத் தீயிட்டுப் பொசுக்குவார்கள். 'கனவுகளை' ஊட்டும் வானொலியையும், திரைப் படங்களையும், பத்திரிகைகளையும், உழைப்பின் உயர்விற்கும், சமூக மேம்பாட்டிற்கும் உரிய கருவிகளாக மாற்றும் புதிய வாழ்வைக் காணப் போர்க்கொடி உயர்த்துவார்கள்......

## பெண்ணடிமைத்தனம் — முதலாளியக் கண்ணோட்டம்

"குழந்தைகளுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு - கீழ்ப்படிதலையும் மந்தப் போக்கையும், அதே சமயம் குடும்பத் தலைவர்களுக்கு அதிகாரமுறை, ஆக்கிரமிப்பு மனோபாவம் ஆகியவற்றையும் கற்றுத்தரும் ஒரு குடும்பம் - இத்தகைய குடும்பம் உண்மையில் எப்போதாவது சொத்துக்களைச் சேர்க்கிறதோ இல்லையோ- இத்தகைய குடும்பம், முதலாளிய சமூக மதிப்பீடுகளையே புனருற்பத்தி செய்கிறது. குறிப்பாகப் புரட்சியாளர்கள், புரட்சிகர இயக்கப்போக்கில் பெண்களின் மையப்பங்கை அங்கீகரிக்க வேண்டும். வரலாற்று முறையில் பார்த்தால் பெண்கள் தான் முதலில் அடக்குமுறைக்கு உட்பட்டவகுப்பு, அங்கிருந்துதான் சுரண்டலின் பிறவடிவங்கள் வளர்ச்சி பெற்றன என்று நான் கருதுகிறேன். பெண்களின் மீது செலுத்தப்படும் அடக்குமுறையில் வர்க்க அடக்குமுறை செயல்படுவதை நாம் பார்க்க வேண்டியது அவசியமாகும். பெண்ணைத் தனக்குச் சமமாகக் கருதமுடியாமல், அவளிடம் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கும் ஓர் ஆண் அரசியலில் எத்தகைய முற்போக்காளனாக இருக்கமுடியும் ?

வீட்டில் ஓர் இளைஞன் கற்கும் முதல் பாடம் சிறுவர் சிறுமியருக்கிடையில், அல்லது ஆண் பெண்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு இயல்பானது என்பதாகும். இதன் அடிப்படையில் பல எதிர்மறை இலட்சியங்கள் உருவாகின்றன. வர்க்க, அரசியல் ஏற்றத்தாழ்வை இயல்பாக ஏற்கும் மதிப்பீடுகள் இப்படி உருவாகின்றன.

— மைக் —



## வெற்றிடங்களை நிரப்புவோம் !

ஒடுக்கு முறைக்குள் இருந்து, அவற்றைத் தகர்த்தெறியக் குரல் கொடுக்கவும், அடிமைச் சிறைகளை உடைக்கவும் 'சக்தி' வெளிவர ஆரம்பிக்கிறாள்.

இவள் பெண்களின் குரல்; ஒடுக்கப்படுகிற மக்களின் குரல்; இன்னும் குறிப்பாக, ஒடுக்கப்படுகிற தமிழ் மக்களுக்குள்ளேயே ஒடுக்கப் படும் பெண்ணின் குரல்.

தோழர்களே ! நம்மைச் சூழ உள்ள பெண்களைப் பாருங்கள். காலங்காலமாக, இந்தச் சமுதாய அமைப்பு அவர்களுக்கு விதித்துள்ள சிறைகளையே உணரமுடியாமல் அறியாமைக்குள் எத்தனை பேர்? உணர்ந்தும் ஒன்று திரளாமல் உதிரிகளாக எத்தனை பேர் ?

கலை, இலக்கியம், கலாசாரம் எல்லாவற்றிலும் எம்மை வியாபாரப் பொருளாக்கும் கீழ்மை நிலவுகிறது. நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, திரைப்படம் எல்லாவற்றிலும் பெண்களின் தளத்தில் நின்று படைக்கப்பட்டவை எத்தனை ? விரல்விட்டு எண்ணிவிடலாம். எழுதும் பெண் படைப்பாளிகளும் நசிவு இலக்கியப் போக்கிற்கு உட்பட்டு பெண்களைப் பெண்களாகவே சித்தரிப்பதில்லை. இந்துமதி, சிவசங்கரி, வாஸந்தி என்று இந்தியாவிலும், யோகா பாலச்சந்திரன், அன்னலட்சுமி இராஜதுரை, தமிழ்ப்பிரியா என்று இலங்கையிலும் பெண்களை விற்கும் 'அடிமை' எழுத்தாளர்கள்......

இத்தகைய சூழலில் - படைப்பிலக்கியத்தில், சமூக வாழ்வில், போராட்டத்தில் சகல இடங்களிலும் ஒரு பெண்நிலை நோக்கிற்குரிய வெற்றிடம் ஒன்று காணப்படுகிறது.

எல்லாப் பெண்களையும் நோக்கி 'சக்தி' விடுக்கும் கோரிக்கை இதுதான் : தளைகளை உடைப்போம்; வெற்றிடங்களை நிரப்புவோம் !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு தோழியின் குரல்

புனிதை

தோழி
எழுந்து வா
இன்னும் என்னடி இருட்டினில் வேலை ?

மீண்டும் மீண்டும்
அடுப்படி தஞ்சமாய்
அடிமை வாழ்வே தலை எழுத்தாக
எத்தனை நாள் தான் இந்த வாழ்வு ?

மானாக மருளாதே
அன்னம் போல் அசையாதே
வீறு கொண்டு எழு
எமது உரிமைகளை வென்றெடுப்போம்.

அன்று
தலையை குனிவது அழகென்று சொல்லி
உலகையே பார்க்காமல் உன்னைத் தடுத்தனர்
உலகையே பார்க்காமல்
எத்தனை நாள்தான் இந்த வாழ்வு
இன்றும் அப்படியா ?

உன்னைச் சுற்றி கிடுகு வேலிகள்
இனியும் இருப்பதை அனுமதிக்காதே
இன்னும் என்னடி இருட்டினில் வேலை
தலையை நிமிர்த்து
எழுந்து வா ;
உலகைப் பார் !

# சூரியன்

அம்பை

வெகு சாதாரண இயந்திர உபகரணங்களால் நெய்யப்பட்ட கம்பளிக் கோட்டும், கால் சராயும் அவை. இறந்த எவனிடமிருந்தோ பிடுங்கப்பட்ட குல்லாயும் ஸாக்ஸும். அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். அம்மாவின் முகமும், அவன் பிடித்துக் கொண்டிருந்த கையும் தான் தெரிந்தன அவனுக்கு.

பயிர்கள் எரிக்கப்பட்ட நிலத்தின் மேல், இருட்டில், துழாவிக் கொண்டு அவர்கள் நடந்துகொண்டிருந்தார்கள்.

அவன் வாழ்ந்த ஐந்து நீண்ட வருஷங்களில் அவன் வெளியே வரும் முதல் தடவை அது.

காலில் தட்டுப்பட்ட நிலம் இரத்தமும் சதையும் கொண்ட ஒன்று போல் அவன் கையால் தைத்த பாதணிகள் மேல்பட்டு "நான் தான் மண். என்னை ஸ்பரிசித்துப் பார். நான் தான் மண்" என்றது.

அவன் அம்மாவின் கையை ஒரு நொடிக்கு உதறி மண்ணைத் தொட்டான்.

அம்மா குனிந்து அவனைப் பிடித்து நிறுத்தினாள்.

மங்கிய நிலவொளியில் கோடுகள் நிறைந்த முகம் அவன் முகத்தருகே வந்தது. கண் இமைகளில் சோகங்கள் கனத்தன. இதழ்களின் சரிவில் கன்னங்களின் தொய்வில் ஆற்றாமைகள் கப்பிக் கொண்டிருந்தன.

'நேரமில்லை மகனே. நமக்கு இதற்கு நேரமில்லை'

'ஒரே ஒரு தடவை அம்மா. அப்புறம் நான் எப்போ வெளியே வருவேனோ?'

'விடிந்து விடும். வேகமாகப் போகலாம் வா'

நரம்புகள் புடைத்த புறங்கையைப் பற்றிக் கொண்டான் அவன். அவர்கள் நடந்தார்கள்.

எரிக்கப்பட்ட நிலத்தின் முரட்டு ரோமம், இலைகள் செத்துக் குச்சிக் கிளைகளை விரித்து நிற்கும் மரங்கள், சிறு ஓசை கேட்டாலும் அவர்கள் பதுங்கும் புதர்களின் முட்கள் எல்லாமே அவனுக்கு புதியவை.

பூமிக்கு அடியேயுள்ள சிறு உலகில் வாழும் பல குடும்பங்களில் அவனுடையதும் ஒன்று. அடியேயே பள்ளி; அங்கேயே போருக்கான உதவிப் பொருட்கள் தயாரிப்பு; அங்கேயே சாவு; பிறப்பு; அன்பு; ஏமாற்றங்கள் எல்லாமும்.

சுற்றியுள்ள சுவர்களே அவன் உலகம்; அம்மா சில சமயம் தாலாட்டு ஒன்று பாடுவாள்.

நீ இப்போது தூங்கிவிட்டால்
விழித்ததும் தோட்டத்தில்
ஓடவிடுவேன்
பூக்களைப் பறிக்க விடுவேன்.
நீ இப்போது தூங்கிவிட்டால்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் தூங்கி விடுவான். அம்மா தன் வார்த்தையை ஒரு நாளும் காப்பாற்றியதில்லை.

அம்மா எப்போதும் சொல்லும் ஒரு கதைக்கு அவனாகவே ஒரு சிறு தலைப்புச் சூட்டியிருந்தான்— "நமக்கு நிலங்கள் இருந்தபோது"

"மாடுகள் கத்தும் காலையில், மரப்பக்கெட்டில் பால் கறப்பேன். உன் அப்பா—...— அவர் ஆத்மா நிம்மதியடையட்டும்..... மண்ணை முத்தமிட்டுவிட்டு வேலையைத் தொடங்குவார் காலையில் உன் அக்காவும், அண்ணாவும்...... அண்ணா எனும்போது குரல் உடையும். அண்ணா வெளியே இருந்தான்...... பள்ளிக்குப் போய் மத்தியானம் வரும்போது வீட்டுக்கு வெளியே உட்கார்ந்து சாப்பிடுவோம் எல்லோரும். உன் அப்பா...... நெஞ்சைத் தொட்டுக் கொள்வாள்— பாடுவார் குரலெடுத்து. குரலில் சிரிப்பும் களிப்பும் ஆட!

"எப்போம்மா இதெல்லாம்"

"நமக்கு நிலங்கள் இருந்தபோது"

அண்ணாவைப் புகைபோல், அழுத்தமில்லாமல் நினைவிருந்தது. அண்ணா ஒருமுறை வந்திருந்தான். போர் வீரனின் உடைபோல் ஒரு உடை. ஒழுங்கான போர் வீரனின் உடை இல்லை அது. இறந்துபோன அமெரிக்கச் சிப்பாய்களிடமிருந்து உருவி எடுக்கப்படும் உடைகளைப் போல் பளபளக்கும் பித்தான்களோ, பட்டைகளோ, அணியைக் குறிக்கும் சின்னங்களோ அதில் இல்லை. அவன் கையில் துப்பாக்கி இருந்தது. அவன் முகத்தில் கோபமும், வீரமும் ஜொலித்தன. ஆகவே அவன் போர்வீரன். அவன் கண்களை மூடிக்கொண்டு தூங்குவது போலிருந்தபோது அம்மாவும் அண்ணாவும் பேசிக்கொண்டார்கள்.

"முடியப் போகிறதா மகனே?"

'முடியும். முடியும்.' அண்ணா மெல்ல சப்தம் வர சிரித்தான்.

'எப்போது முடியும் தெரியுமா? அமெரிக்காவிலிருந்து போரை நிறுத்த சில வருஷங்களுக்குப் பிறகு ஒரு நிபுணர் வருவார். விமானங்கள் பறந்து கொண்டிருக்கும் விர்விர்என்று. வேறு ஒரு சப்தமும் இருக்காது. வெறும் பாழ்வெளியும் செத்த மரங்களும் எலும்புக் கூடுகளுமே 'இனி போரை நிறுத்தலாம் இங்கே யாரும் இல்லை' என்று அவர் எழுதி அனுப்புவார் விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், மாணவர்கள். இங்கே வருவார்கள். இங்கே ஒரு புது உலகம் உருவாகும்—நூறு மாடிக் கட்டிடங்கள், 200 மாடிக் கட்டிடம ஒன்றைத் திறக்க பெரிய மனிதர் ஒருவர் வருவார். கட்டிடத்தைத் திறந்ததும் பெருத்த ஓசையுடன் என்ன வெளிப்படும் என்கிறாய்? ம்'

அப்போதுதான் அவன் மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தான். அம்மா ஏறிட்டு அண்ணாவைப் பார்த்தாள்.

'எலும்புக் கூடுகள்! மண்டை ஓடுகள்! ஹாஹா!' அண்ணா சிரித்தான். அம்மா செவிகளைப் பொத்திக் கொண்டாள்.

அந்தக் கற்பனை அவளை வருத்தியிருக்க வேண்டும்.

மீண்டும் அண்ணாவைப் பார்த்தபோது அண்ணா அழுதுகொண்டிருந்தான். ஓசையில்லாமல், கேவல் இல்லாமல். அண்ணாவின் முகம் நினைவில்லை.



அந்த அழுகையும், விரக்தியும் மாத்திரம் தூங்கும்போது கனவின் ஒரு அங்கமாகவும் விழிக்கும்போது மனதில் ஒரு விம்மலாகவும் பதிந்து விட்டது.

அம்மா அவனைத் துரிதப்படுத்தினாள்.

'விடிந்து விடும். வேகமாக வா.'

வேகமாக நடக்கும்போதே அடர்ந்த புதர்கள் கீழும் இருண்ட பிரதேசங்களிலும் அவள் கண்கள் ஊடுருவின. அவள் அக்காவைத் தேடுகிறாள். அக்கா இரவுக்குமுன் முக்கிய காரியமாகப் போனாள். பின் வரவே இல்லை. வெகுநேரம் யோசித்துப்பின் அம்மா இவனுக்குக் கனத்த கம்பளி உடைகளை அணிவித்தாள்.

'அம்மா குளிர் இல்லையே அம்மா.'

'நாம் வெளியே போகிறோம் மகனே.'

'தோட்டத்தில் ஓடவா?'

'ஆம்... தோட்டங்கள் இருந்தால்.'

தனியாகப் போனால் ஆபத்து நேரிடலாம் என்றுதான் அவனையும் கூட்டிப் போவதாக அம்மா பின்பு சொன்னாள். ஆபத்து என்ற வார்த்தைதான் அவன் முதலில் பேசக் கற்றான். எல்லா கேள்விகளும், பிடிவாதங்களும், அழுகையும், சிணுங்கல்களும் அந்த வார்த்தையில் அடங்கிப் பொளிந்து போயின. ஆபத்து ரொம்ப அதிகாரமுள்ள வார்த்தை.

அவர்கள் முறைமாறு வேஷம் போட்டுக் கொள்வதுபோல் விளையாடினார்கள்.

கைகளைச் சிறகுகளாகப் பிரித்து "நான்தான் தேவதை" என்றான் ஒருவன். உபயோகமற்றவன்.

சுடுவதுபோல் காட்டி நான் வீரன்: என்றான் ஒருவன். இவன் நிமிர்ந்து நின்று நெஞ்சைத் தட்டி "நான் யார் தெரியுமா? நான் தான் ஆபத்து." என்றான்.

நல்ல விளையாட்டு அது.

'கடவுளே, அவன் உயிரோடு இருக்கட்டும்.' அம்மா முணுமுணுத்தாள்.

அம்மா அடிக்கடி இந்த ஒரு நபரை அழைத்தாள். உதவி கோரினாள்: 'அம்மா, அந்த உலகில் ஹியரிங்... ஏட் கிடையாதா?'

'எதற்கு?'

'நீ என்ன சொன்னாலும், அவன் பேசுவதில்லையே?'

'அதிகப் பிரசங்கி. நரகத்துக்குப் போவாய்.'

அம்மாவின் நடை துரிதமாகியது. ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் அங்கும் இங்கும் நுழைந்து தேடினாள். புதர்கள் முகத்தைக் கீற அதனுள் தலையை நுழைத்தாள். சில நிமிஷங்களுக்குப் பிறகு பெரிய புதரொன்றின் அடியே நோக்கியவள் பின் நகராமல், கால் மடங்க அங்கேயே அமர்ந்தாள்: அக்கா அங்கே படுத்துக்கொண்டிருந்தாள். அம்மாவின் அருகே கைகட்டி அவன் நின்றான்: அம்மா சுருங்கிய விரல்களை அக்காவின்

[14ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஊர்வசியின்

## கவிதை

யாழ்ப்பாணம்
10 - 11 - 83

எனக்குத் தெரிந்த
எந்த விலாசத்திற்கும்
இக்கடிதத்தை அனுப்பிப் பிரயோசனமில்லை.
ஆனாலும் இதை எப்படியும்
உங்களிடம் சேர்ப்பித்தே ஆகவேண்டும்.
உங்களிடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை
என்னுள் உறுதியாக உள்ளது.

இங்கே முற்றத்து மல்லிகை
நிறையவே பூத்துள்ளது.
பகலில் தேன் சிட்டுக்களும்
இரவுகளில் பூமணம் சுமக்கின்ற காற்றும்
எங்கள் அறை வரையிலும் வருகின்றன.
அடிக்கடி எனக்குத் தெரியாத யாரெல்லாமோ
வீட்டுப்பக்கம் வந்து போகிறார்கள்.
ஆயினும் இன்றுவரை
விசாரணை என்று யாரும் வரவில்லை;

சின்ன நாய்க்குட்டி காரணமில்லாமலே
வீட்டைச் சுற்றிச்சுற்றி ஓடுகிறது;
வாலைக் கிளப்பியபடி, எதையோ
பிடித்துவிடப் போவது போல;



விழித்திருக்க நேர்ந்துவிடுகிற இரவுகளில்
உங்களுடைய புத்தகங்களை
தூசி தட்டி வைக்கிறேன்.
அதிகமானவற்றைப் படித்து முடித்துவிட்டேன்;
உங்களுடைய அம்மாவின் கடிதங்களை
நான் பிரிக்கவேயில்லை.
அவை சுமந்துள்ள புத்திர சோகத்தை
என்னால் தாள முடியாது.

மேலும், அன்பே
எங்கள் மக்களின் மீட்சிக்காகவே
நீங்கள் பிரிந்திருக்க நேர்ந்துள்ளது
என்பதே எனக்கு ஆறுதல் தருவது.
இந்தத் தனிமைச் சிறை
தரும் துயர் பெரிது ஆயினும்
உங்களைப் பிரிந்தபின்
எதையும் தாங்கப் பழகியிருக்கிறேன்.

மேலும், இன்னொன்று,
இதுதான் மிகவும் முக்கியமாக
நான் எழுத நினைத்தது
நான் ஒன்றும் மிகவும் மென்மையானவளல்ல
முன்புபோல் அவ்வளவு விஷயம் புரியாதவளுமல்ல
நடப்பு விஷயங்களும் எதுவும்
நல்ல அறிகுறிகளாக இல்லை;
நீண்ட காலம் நாங்கள்
பிரிந்திருக்க வேண்டும் என்பது என்னவோ
நிச்சயமானதே; பின்னரும்
ஏன் இன்னமும் நான் வீட்டுக்குள்
இங்கே இருக்க வேண்டும்?
என்ன,
நான் எழுவது புரிகிறதா உங்களுக்கு?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரதிராஜாவின்

# புதுமைப் பெண்

திரைப்பட விமர்சனம்

பெண்விடுதலை இயக்கங்கள் உலகம் எங்கும் பரவிக் கொண்டிருக்கும் நேரம் இது. இப்படத்தின் மூலம் பாரதிராஜா புதுமைப் பெண்ணைப் படைத்து விட்டாரா? இவர் இடையிடையே பாரதியைக் காட்டுவதன் மூலம் பாரதி பாடிய புதுமைப் பெண்ணைப் படைத்து விட்டதாகக் காட்ட நினைக்கிறார். பாரதியே உண்மையில் புதுமைப் பெண்ணைப் படைத்தாரா? "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்கின்றான் பாரதி; பாரதி காலத்தில் புகுந்த புதிய உற்பத்தி முறையின் காரணமாக தொழிற்சாலையில் வேலை செய்ய இருபாலரும் தேவைப்படுகின்றனர். இதனால் அச்சத்தையும, நாணத்தையும் வீசிவிட்டு வெளியே வரச்சொல்கிறான். 'மாட்டை அடித்து வசக்கித் தொழுவில் மாட்டிடும்' வழக்கம் போல, பெண்ணை வீட்டுக்குள் அடைப்பதையும், விற்பனைப் பண்டமாக்குவதையும் எதிர்க்கின்றான் பாரதி. பெண்டாட்டியை அடிமைப்படுத்துவதையும் எதிர்க்கிறான். "பெண்டாட்டியை அடிமை கொள்ளல் வேண்டிப் பெண்ணடிமை கொள்ளலாமோ?" என்கிறார். பெண்டாட்டியை அடிமைப்படுத்துதலை நியாயப்படுத்துகிறார்; அப்படியானால் ஒவ்வொரு பெண்ணும் யாராவது ஒருவருக்கு மனைவி ஆனவள் அல்லது ஆகப் போகிறவள் தானே! எல்லாரும் யாருக்காவது அடிமை தானே! பிறகு புதுமைப் பெண் — விடுதலை பெற்ற பெண் ஏது? எனவே பாரதியின் கண்ணோட்டப்படி அமைபவள் கூடப் புதுமைப் பெண் இல்லை. சரி, இப்படிப் பாரதி பாடிய பெண்ணையாவது பாரதிராஜா படைத்திருக்கிறாரா? இல்லை.

சீதா — கதாநாயகி அச்சமும், நாணமும், அடிமைச் சிறுமதியும் கொண்டவளாகவே படைக்கப்பட்டுள்ளாள். காதலிக்கும் போதும், திருமணம் ஆன பிறகும் வேத காலத்து மாதரைப்போலக் கணவன் காலில் பூவைத்துத் தொட்டுக் கும்பிடுகிறாள். பட்டதாரிப் பெண் ஆகையால் திருமணத்திற்குப் பிறகு வேலை செய்து சம்பாதித்திருக்கலாம். இறுதியில் கணவன், தனது கடமையை—உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றி, வழக்காடிக் கணவனையும் விடுவித்ததை —எண்ணாமல் கற்பை சந்தேகிப்பதைத் தாங்க முடியாமல் வெளியேறுகிறாள். இங்கேயும் ஆண், பெண் இருவரையும் காதலன் காதலி அல்லது கணவன் மனைவி என்ற குறுகிய வட்டத்துக்குள்ளே நிறுத்தி விடுகிறார். ஒரு பெண் மகளாக, மாணவியாக, காதலியாக, மனைவியாக, தாயாக,



பெண்ணாக சமூகத்தில் எதிர்கொள்கிற எத்தனையோ சமூக பொருளியல் பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டவில்லை. தொட்டிக்குள் நீச்சலடிப்பது போன்ற குடும்ப உறவோடு மட்டுமே நிறுத்திவிடுகிறார். கதாநாயகி வேத ஒழுக்கமாகிய கூட்டுக்குள் கிடந்து பரிணாம வளர்ச்சியடைந்து எப்படிப் புதுமைப் பெண்ணாகிறாள் என்பதைக் காட்டாமல் கடைசிக் காட்சியில் சாஸ்திர வேத நூல்களைக் குழி தோண்டிப் புதைப்பதாகக் காட்டுகிறார் இத்தகைய கொடுமைகளை உருவாக்குகிற கொசுப்பண்ணையாகிய அரை நிலவுடைமை அரைக் காலனிய சமூக அமைப்புச் சாக்கடையை மூடாமல் கொசுகளுக்குச் சவக்குழி தோண்டுகிறார்.

வணிகமயமாகிவிட்ட திரைப் படத்தின்மூலம் கூட்டம் சேர்த்து இலாபம் சேர்க்க என்றே கொச்சையான ஆபாச அடிமன உணர்ச்சிகள் தூண்டப்படுகின்றன. இவை விலை போவதற்குக் காரணம் என்ன? இப்போது கிடைக்கிற குறைந்த வருமானத்தைக் கொண்டு திருமணம் செய்யவோ குடும்பம் நடத்தவோ முடியாத இளம் பெண்கள் மற்றும் ஆண்களின் தேங்கிவிட்ட பாலுணர்வுக்கு வடிகாலாக திரைப்படங்களும் பத்திரிகைகளும் அமைகின்றன. திரைப்படம் பார்க்கிற ரசிகர் தம்மைச் சுற்றியுள்ளவர்களை மறந்து கதாநாயகரோடு ஒன்றிவிடுகின்றனர். இந்த உளவியலை அறிந்தே கதாநாயகனுக்கும், கதாநாயகிக்கும் பலவித வண்ண ஆடைகளை உடுத்தி ஆட விடுகின்றனர். இந்தப் படத்திலும் கூட இரண்டு மூன்று இடங்களில் இளம் பெண்களை அரைகுறை ஆடையில் பாடி ஆட விட்டுள்ளார்கள். படம் பார்க்கிற ஆண், மந்தையில் இழக்கிற பொலிகாளையாகி, சுற்றியுள்ள எல்லாப் பசுக்களையும் புணரக்கூடிய நிலையில் கற்பனை செய்ய வைக்கின்றனர். இதுபோலவே ஆண் பெண் உடலுறவுக்கு காப்பி குடித்தல் என்ற குழூஉக் குறியைச் சொல்லிக் கொச்சை வசனங்களைப் பேசவைக்கிறார்கள். படம் பார்க்கிற தாய், மகன், மகள், கணவன் மனநிலையைக் கணக்கில் எடுக்கவில்லை. இந்த வசனங்களைப் பேசிய நிலையிலேயே 'காப்பி குடிக்கும் நேரம்' என்று எழுதி இடைவேளை விடுகிறார்கள். இடைவேளையின் போது உடலுறவு கொள்ளச் சொல்கிறாரா பாரதிராஜா ?

பொலீசிலும், கோர்ட்டிலும், விதியிலும் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறது இப்படம். இடையிடையே ஒன்றிரண்டு வசனங்களும் சில காட்சிகளும் வந்த போதும் படம் பார்த்து முடிக்கும்போதும் பழமை எண்ணங்களை நிலைநிறுத்துவதாகவே உள்ளது. மனைவிக்கு விவாகரத்து உரிமை — பிரிந்து செல்லும் உரிமை உண்டு என்பதை அறிவு பூர்வமாகக் காட்டவில்லை. தன் மீது சந்தேகப்படும் கணவனைத் திருத்த முயற்சி செய்து, முடியாத நிலையில் பிரியாமல் உணர்ச்சியின் அடிப்படையில் பிரிகின்றாள்!

பெண்ணின் பெருமையைக் காட்டிட 'இந்த நாட்டை ஆள்வதும் பெண்தான்' என்ற வசனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகிறது: இந்த மாகாளியின் ஆட்சியில்தான் மாயா தியாகி பட்டப்பகலில் 'நிர்வாண ஊர்வலம் விடப்பட்டார்; கற்பழிப்புகள் காவல்துறையின் நித்திய கடமையாகிவிட்டன. எந்தவர்க்க ஆட்சி நடக்கிறதென்பது தானே முக்கியம்! "ஆலிங்கனங்கள் பரவசம் இதில் அனுமதி இலவசம்" என்பது போன்ற ஆபாசக் கவிஞன் வைரமுத்துவின் பாடல் உண்டு.

பெண்ணடிமைத்தனம் இப்போதைய உற்பத்தி முறையுடன் தொடர்புடையதாகும். நிலவுடைமைச் சமுதாயத்தில் ஆடு, மாடு போன்ற உடைமை ஆகியிருந்த பெண் முதலாளியச் சமுதாயத்தில் வணிகப் பொருளாகின்றாள். அரைக் காலனிய அரை நிலவுடைமை அமைப்பிலும் அவள் உடைமையாகக் கருதப்படும் நிலையே மேலோங்கியுள்ளது. இந்த உற்பத்தி முறையை மாற்றாமல் பெண்ணை விடுதலை செய்ய முடியாது. அதே வேளையில் மக்கள் தொகையில் அரைப் பங்குள்ள பெண்கள் பங்கேற்காமல் சமுதாய விடுதலை உற்பத்திமுறை மாற்றம் —நடக்காது. எனவே புதுமைப் பெண் என்பவள் — தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டியவள் — அதற்கான அரசியல் பொருளாதாரத் தத்துவப் போரில் ஈடுபட வேண்டும். இத்தகைய போர்புரியும் இயக்கத்தோடு ஒன்றுபவளே புதுமைப்பெண் ஆவாள்.

நன்றி : செந்தாரகை

குறிப்பு : பாரதி பற்றிய இவ் விமர்சகரின் கருத்துக்களுடன் சக்திக்கு உடன்பாடு கிடையாது.

[9ம் பக்கத் தொடர்ச்சி

கேசத்தில் துளைத்தாள். முகத்தின் மீது வருடினாள். நெஞ்சின் மீது தட்டினாள். விலகி இருந்த உடைகளை இழுத்து மூடினாள்.

'என் சின்னப் பெண்ணே' என்றவாறு அவளை இழுத்துச் சேர்த்து மார்பில் சாய்த்துக் கொண்டாள்.

அவன் கைகட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் புரியவில்லை வேறு என்ன செய்ய வேண்டும் என்று.

அக்காவை அணைத்தவாறே வெகு நேரம் அம்மா அமர்ந்திருந்தாள். பின்பு நொடியில் எழுந்து நின்று 'போகலாம்' என்றாள்; மீண்டும் நடக்கும்போது அம்மா பேசவில்லை. அவள் பிடிமாத்திரம் இறுகியிருந்தது.

நடக்கும்போது அவனுக்குப் பழக்கம் இல்லா ஒரு புது ஒளி மெல்ல பரவத் தொடங்கியது. அவன் கண்கள் கூசிக்கொண்டன. தூரத்தே ஒளி நூல்களால் தொங்கவிட்ட மஞ்சள் பந்து ஒன்று மிதந்து வந்தது.

அம்மாவின் கையை அசைத்தான்.

'என்ன மகனே?'

அவன் கையைப் பந்தின் பக்கம் சுட்டிக்காட்டி தலையை உயர்த்தி அம்மாவைப் பார்த்து 'அது என்னது அம்மா?' என்றான்.

சில வினாடிகள் அதைப் பார்த்தவாறே மௌனம் சாதித்த அம்மா' திடீரென்று தரையில் அமர்ந்து அவனை அணைத்துக் கொண்டு அழுதாள்.

★ 'அம்பை' என்ற சீ. எக்ஸ். லக்ஷ்மி தமிழகத்தின் முக்கியமான சிறுகதையாளர்களில் ஒருவர். இவரது 'சிறகுகள் முறியும்' என்ற தொகுதியிலிருந்தே இக்கதை பிரசுரிக்கப்படுகிறது.



# ஒரு பெண் எழுத்தாளரின் ஞானஸ்நானம்

குமாரி

ஒக்டோபர் மாத மல்லிகையில் யோகா பாலச்சந்திரன் என்ற புகழ்பெற்ற ஈழத்துத் தமிழ்ப் பெண் எழுத்தாளர் திலகத்தின் 'இங்கிருந்து எங்கோ' என்ற தலைப்பிலான கடிதம் (கதை? ஒன்று வெளிவந்துள்ளது. எல்லோரும் தேடிப்பிடித்து வாசித்துப் பாருங்கள்.

சிலகாலங்களுக்கு முன்புவரை பெண் விடுதலை பற்றி ஆங்காங்கே எழுதி வந்த யோகா பாலச்சந்திரன், இன்று அந்த 'விடுதலை' உணர்வுகளை உடைப்பில் போட்டுவிட்டு தலைகீழாக மாறியிருக்கிறார். சீரழிந்த ஏகாதிபத்திய கலாச்சாரத்தில் மூழ்கிவரும் கொழும்பில் இருந்து கொண்டு, தன்னைச் சூழ இருக்கும் கொழும்பு மேல்தட்டு வர்க்கப் பெண்களைப் பார்த்துவிட்டு, எல்லாப் பெண்களுக்கும் பொதுவான பிரச்சனையாகச் சிலவற்றை எண்ணி தீர்வு வழங்க, ஆலோசனை கூற முற்பட்டுள்ளார். கொழும்பில் வாழும் இவருக்கு இன்றைய எமது இலட்சக்கணக்கான உழைப்பாளிப் பெண்களின் நிலை, அவர்களின் விடுதலை என்பவைபற்றி என்ன தெரியப் போகிறது?

கொழும்புப் பத்திரிகைகளின் ஆஸ்தான பெண் எழுத்தாளராக, பானுரேகாவைப் பற்றியும், குடும்பத்திட்ட வழிமுறைகளைப் பற்றியும், 'ஆங்காங்கே' பெண்விடுதலை பற்றியும் எழுதி நிரப்பிவரும் திருமதி யோகா பாலச்சந்திரனின் 'யுகமலர்கள்' என்ற சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவந்ததும், அனைத்து விமர்சகர்களாலும் 'முற்போக்கு' என்றும் பெண்ணடிமைத்தனை நீக்கவந்த போர்வாள், என்று அது புகழப்பட்டதும் பழங்கதை.

சரி! இந்தக் கதைக்கு வருவோம். இதன் சாராம்சம் இதுதான். ஆரம்பத்தில் பெண்விடுதலை என்று பேசித்திரிந்த ஒருத்தி வாழ்க்கையில் அது சரிவராது என்று உணர்ந்து கணவனே கண்கண்ட தெய்வம் என்று 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' வாழ்வதே பேரின்பம் என்று மாறுகிறாள். அதன் பிறகு வாழ்க்கையில் நிறைவு பெறுகிறாளாம்——

"வாழ்க்கையின் வசந்த காலமான இளமையின் முக்கிய பகுதி வீணாக, வெறுமையில் கரைந்துவிட்டதே என்ற வெறுப்பில் விரக்தியில் நீ எடுத்த முடிவு சரியோ பிழையோ என்று இனிமேல் ஆராய முனையாதே ஏதோ ஒரு வகையில் வாழ்க்கையில் ஒரு நிறைவை, மகிழ்ச்சியை தேடிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளப்பார்'' என்கிறார். உண்மையில் இந்தக் கருத்து மிகவும் மோசமானது. ஏதோ ஒரு விசயத்தில் சரிபிழையை உணராமல் மனம் போன போக்கில் நடந்தால் எப்படி இருக்கும்? எது சரி பிழை என்று ஆராயாது எபபடியாவது, மகிழ்ச்சியைத் தேடிக்கொள்ளச் சொல்லும் இந்தக்கருத்து சமரசப் போக்குடையதாகும். இந்த ஒடுக்குமுறைச் சமுதாயத்துடன் சமரசம் செய்யக்கூறி பெண் அடிமைத்தனத்திற்கு வக்காலத்து வாங்கும் இவர் பெண்களுக்கு உபதேசம் வேறு செய்யப் புறப்பட்டு விட்டார்.

ஏதோ ஒருவகையில் மகிழ்ச்சியைத் தேடிக் கொள்ளப்பார் என்று சொன்னால் இதற்கு என்ன அர்த்தம்? அடிமையாக அடிமை வாழ்வு வாழ்ந்தாலென்ன, விபச்சாரியாக, இன்னும் கேவலமான தொழில் செய்பவளாக இருந்தால் என்ன சந்தோஷம் பெற்றுக் கொண்டால் காணுமாம். மகிழ்ச்சி என்பது எப்போது உருவாகிறது? இந்த இனம் புரியாத தவிப்புகளுக்கு காரணம் என்ன? இன்றைய எமது சமுதாய அமைப்பு பணம் படைத்த, வசதி படைத்த மக்களுக்கு மட்டுமே சகல வகையான வசதிகளையும் அளித்துள்ளது. மகிழ்ச்சியற்ற இந்த வாழ்வு என்பது இந்த ஏற்றத்தாழ்வான சமுதாய அமைப்பின் ஒரு விளைவேயாகும். வாழ்க்கையில் அதிருப்தியையும், துயரையும் அதிகமதிகமாக நிலவச் செய்யும் முரண்பட்ட இந்த வர்க்க சமுதாயத்தை மாற்றாமல், 'நிம்மதி' ஏற்பட்டுவிட முடியாது. சுரண்டலற்ற சமூக அமைப்பிலேயே 'மகிழ்ச்சிக்கு' உண்மையான அர்த்தமிருக்க முடியும். மகிழ்ச்சியின்மைக்கான காரணங்களைப்பற்றி சிந்திக்காது மகிழ்ச்சியை உருவாக்கிக்கொள்ள நினைப்பது ஏமாற்று வேலையே. இந்தக் கருத்துகள் எப்போதும் பிற்போக்காளரதும், வர்க்க சமூகத்தில் பயன் பெறுபவர்களினதும் குரலே அன்றி, வேறல்ல! இந்த ஏற்றத்தாழ்வான சமுதாய அமைப்பில் எமது கூலி விவசாயப் பெண்களும், உழைக்கும் பெண்களும் மிகப் பெருமளவு துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இவை பற்றி எல்லாம் கதைப்பதற்கும் எழுதுவதற்கும் யோகா பாலச்சந்திரனுக்கு என்ன தெரியப்போகிறது.

பெண்களின் உண்மையான விடுதலையை எப்படிச் சாத்தியபாக்குவது என்று திடமாக அறியத் திராணியற்ற இவர் தன்னைப் போல் ஏனைய பெண்களையும் படி சொல்வதுதான் ஆச்சரியமானது. தனது தோழிகள் வசந்தியும், நீலாவும், மஞ்சுவும், சுகந்தியும் தமக்கு சந்தோஷம் இல்லை என்று வருந்துவதால் சொர்ணகிரியில் சரஸ்வதிப் பாட்டி வாழும் அடிமைத்தனமான வாழ்க்கையை இவர்களை மேற்கொள்ளச் சொல்வதா? இல்லவே இல்லை. பெண்களின் பிரச்சனைக்கான அடிப்படைக் காரணம் எங்கிருந்து தொடங்கியது.

எமது சமூக அமைப்பும், எமது குடும்பங்களுமே பெண்ணடிமைத்தனத்தை கற்றுக் கொடுக்கும் ஊற்றுகளாகும். எனவே இந்த சமூக அமைப்பையும் அதன் ஒடுக்குமுறை வடிவங்களையும் தூக்கி எறிந்து, அவற்றில் இருந்து விடுதலை பெறுவது அவசியமாகும்.

பெண்விடுதலை பற்றிய சரியான புரிந்துணர்வுடன் பெண்கள் விடுதலைக்காகப் போராடி வெற்றி பெறுவது அவசியமாகும். இல்லையேல் அடிமைத்தனத்தின் தளைகள் என்றுமே அழியப்போவதில்லை.

பெண்களை அவமரியாதை செய்யும் பெண் எழுத்தாளர்களின் பட்டியல் மிகவும் நீண்டது. தமிழகத்தில் சிவசங்கரி - இந்துமதி வரிசையில் ஈழத்திலும் யோகா பாலச்சந்திரன் சேர்ந்து கொள்கிறார். ஆனால் அம்மணி! நீங்கள் பின்வாங்கிப் போவதால் மற்றைய பெண்களும் அப்படிச் செய்வார்கள் என்று நம்ப வேண்டாம்.

இது புதிய தலைமுறை!

இறுதியாக, யோகா பாலச்சந்திரனுக்குத் தான் எல்லாமே தலைகீழாகிப் போய்விட்டதென்றால் மல்லிகைக்கு என்ன வந்துவிட்டது? மல்லிகையினதும் டொமினிக் ஜீவாவினதும் இருபதாண்டுகால முற்போக்கு இலக்கிய 'வேள்வி' இன்று என்னவாயிற்று?

---

24ம் பக்கத் தொடர்ச்சி

பகுதியாகவே) தனது சொந்த நாட்டில் சோசலிசத்தினைக் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பாக இத்தேசிய விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்தும் என்பதால். மகளிர் விடுதலையும் இதனுடன் இரண்டறக் கலந்துள்ளது. எனவே இந்தப் போராட்டத்தை வலுவூட்டும் விதத்தில் மகளிர் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் ஐக்கியமாகுவது மிகவும் அவசியமானதாகும். அதன் மூலமே மகளிர் தமது உண்மையான விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முடிவாக ஒரு விடயத்தைக் குறிப்பிடவேண்டும். தேசிய விடுதலைப் போராட்டம் பாட்டாளி வர்க்கத் தலைமையில் முன்னெடுக்கப்படுதலை வலியுறுத்துவதும், அதனோடு பெண்கள் தமது ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்வதும், தமது உரிமைகளுக்காக விடாப்பிடியாகத் தொடர்ந்து போராடும் நோக்கில் தம்மை ஸ்தாபனமாக்கிக் கொள்வதும் பெண்களின் விடுதலைக்கான மிகவும் அவசியமான விடயங்களாகும்.

'தோழி' கட்டுரையாளர் 'யாத்ரா' குறிப்பிட்ட அனைத்துப் பெண்களையும் அணிதிரட்டலில் இத்தகைய நடைமுறையைக் கையாள்வதன் மூலமே சீர்திருத்தவாத சமரசப் போக்கில் இழுபடாமல் உறுதியாகப் பெண் விடுதலைக்கான போராட்டத்தை நடாத்துதல் சாத்தியமாகும்.

குறிப்பு: இது சம்பந்தமான கருத்துகள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நானொரு பெண்

**மார்ஜியே அஹ்மதி ஒஸ்கூய்**

இக் கவிஞர் ஈரானில் 1945-ல் பிறந்தவர்; ஈரானியச சமுதாயத்திலே உள்ள மிக மோசடியான அநீதிகளுக்கும், சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிராகப் போரிட்ட பெண் வீரர்; ஆசிரியத் தொழிலில் பணி புரிந்தவர்; மாணவர் இயக்கத்தில் மும்முரமாக இவர் ஈடுபட்டதால் சிறைக் கொட்டடியில் அரசு இவரைப் பூட்டி வைத்தது; "செரிக் ஃபெடாலிக்காலக்" ['கொரிலாக்களின் படையணி'] யில் செயற் துடிப்புமிக்க உறுப்பினர்; 1973 மே மாதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படைகளால் தாக்கப் பட்டு கொல்லப்பட்டார். மக்களின் போராட்டத்திற்குப் பாய்சசிய புது இரத்தம் போன்றவை இவரது கவிதைகள். கோடானுகோடி மக்களின் உள்ளத்திலே புரட்சிக்கனலை மூட்டி விட்டன இவரது எளிய கவிதைகள்!

நானொரு தாய்
நானொரு சகோதரி
நானொரு பணிவுள்ள மனைவி
நானொரு பெண்.

நினைவறிந்த நாள் முதல்
பாலைவனச் சுடுமணலில்
மேலும் கீழுமாய் உழைத்துக் களைக்கின்றேன்;

நானொரு பெண்
வடபகுதிக் கிராமப் பகுதியிலிருந்து வந்தவள் நான்.

நெல் விளையும் கழனியிலே
தேயிலைத் தோட்டங்களிலே
கசக்கிப் பிழியப்பட்டு
உழைக்கிறேன்
நினைவறிந்த நாள்முதல் உழைக்கிறேன்
காலை முதல் மாலை வரை களத்து மேடுகளில்



உடலெல்லாம் 'இறுகிப் 'பிழிய
நானும் என்னுடன் எலும்பும் தோலுமாய்
ஒரு மாடும்
உழைக்கிறோம்.

நானொரு பெண்
உழைத்துக் கொண்டிருந்த போதே
மலைகளே படுக்கையாக
என் மகவை ஈன்றெடுத்தேன்.

நானொரு பெண்
நானொரு தொழிலாளி
ஆலையின் பிரமாண்டமான யந்திரங்களை
என் கரங்கள் இயக்குகின்றன.
அவற்றின் சக்கரப் பற்கள்
எனது வலிமையை, எனது சக்தியை
என் கண்ணெதிரேயே
துண்டுத் துண்டாக கிழித்தெறிகின்றன.

நானொரு பெண்
எனது உயிரின் அமுதமான ரத்தம் குடித்துச்
சுரண்டுபவனின் பிண்டம் தடித்துக் கொழுக்கிறது;
எனது ரத்தம் சுண்டுகின்றது
கந்து வட்டிக்காரனின் மூலதனம் ஊதிப்பருக்கின்றது.

ஏ, கேடுகெட்ட சுரண்டும் வர்க்கங்களே!
உங்களது வெக்கம் கெட்ட அகராதியிலே
பெண்களுக்கு என்ன தகுதி கொடுத்திருக்கிறீர்கள்?

உங்களது காம சூத்திரங்களிலே
பெண்களின் கைகள் மலர்போல் சிவந்தது
உடல் பூப்போல் மென்மையானது
தோல் பட்டுப்போல் மிருதுவானது
தலைமயிர் வாசம் நிறைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிலடி கொடுக்கிறேன் நான்
பெற்றுக் கொள்ளுங்கள்
நானொரு பெண்
எனது உடற் தோல் வெங்கனலை வீசியடிக்கும்
எனது தலைமயிர் ஆலைப்புகை வீச்சமடிக்கும்
எனது கைகள் வலியெனும் கத்தி கிழித்துக்
காயப்பட்டு சிவந்திருக்கும்.

ஏ, வெக்கங் கெட்டவர்களே,
எனது பசி போலியானதென்று கூறினீர்கள்?
எனது அம்மணம் போலி வேடம் என்று கூறினார்கள்?

கேடுகெட்ட சுரண்டும் வர்க்கங்களே!
உங்களது வெக்கங்கெட்ட அகராதியிலே
பெண்களுக்கு என்ன தகுதி கொடுத்திருக்கிறீர்கள்?

நானொரு பெண்
துன்பங்கள் கொத்திக் காயங்கள் நிரம்பிய
இதயமொன்று எனக்குண்டு
எனது கண்களிலே
தீச் சொரியும் விடுதலை அம்புகளின்
சிவந்த பிம்பங்கள்
சீறிப் பறக்கின்றன!
எனது கரங்கள் பயிற்சி பெற்றுவிட்டன
துயரங்கள் கோடி துரத்தினாலும் அஞ்சமாட்டேன்
ஆண்மையோடு நான் ஏந்துவேன்
துப்பாக்கியை!

சமூக நடவடிக்கைகள் இல்லாமலிருக்கும்போது குடும்பத்தை மாற்றியமைத்தல் என்பதே சாத்தியமில்லை. சமூக வெகுஜன இயக்கங்கள் மூலமாகவே குடும்பத்தை மாற்றியமைப்பது என்பது சாத்தியமாகும். வெறும் புத்தகங்களில் இருந்தும், செய்தித்தாள்களிலிருந்தும் கற்றதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூக நடவடிக்கைகளிலிருந்து தனிமைப்பட்டு செயல்படுவார்களாயின் அக்குடும்பங்கள் தங்களை ஜனநாயகமாக மாற்றியமைத்துக் கொள்ளவே முடியாது.

- மாசேதுங் -



# தேசிய விடுதலைப் போராட்டமும் மகளிர் விடுதலையும்

நளாயினி வீரகத்திப்பிள்ளை

மேற்படி தலைப்பில் 'தோழி' இரண்டாவது இதழில் 'யாத்ரா' எழுதியிருந்த கட்டுரை சில முக்கியமான அம்சங்களைத் தொட்டுச் செல்வதாய் அமைந்திருந்தது.

மகளிர் விடுதலைபற்றி சுருக்கமாக மேலும் சில அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மேற்படி தலைப்பில் இரண்டு முக்கியமான விடயங்கள் அடங்கியுள்ளன. 'தேசிய விடுதலை' என்ற விடயமும் 'மகளிர் விடுதலை' என்ற விடயமுமே இந்த இரண்டு விடயங்களுமாகும்; இவற்றைத் தனித்தனியே விளங்கிக் கொள்வதன் மூலம் இவை இரண்டினதும் ஒன்றோடொன்றுடனான தொடர்பு பற்றி ஆராய்வது இலகுவாகும் என நினைக்கிறேன். 'தோழி' கட்டுரையாளர் இந்த இரண்டு விடயங்கள் சம்பந்தமாகவும், இவற்றின் இணைவு சம்பந்தமாகவும் தெரிவித்துள்ள கருத்துகளின் குழப்பத்தினை நிவர்த்தி செய்யவும், சரியான அர்த்தத்தில் மகளிர் விடுதலையைப் புரிந்து கொள்ளவும், இவை சம்பந்தமான விவாதங்களிற்கு வழி திறந்து விடவும் இக்கட்டுரை உதவி செய்ய வேண்டுமென்பதே எனது பிரதான நோக்கமாகும்.

முதலாவதாக 'தேசிய விடுதலை' என்ற விடயம் பற்றி நோக்குவோம். நிலப் பிரபுத்துவ அமைப்பின் கீழ் முன்னேறி வந்த முதலாளிய உற்பத்தி முறைகள் தோற்றுவித்த தேசிய உணர்வுகளும், தேசிய விடுதலைப் போராட்டங்களும், தேசிய விடுதலைகளும் பற்றிய வரலாறுகள் நிறையவே ஐரோப்பிய நாடுகளின் வரலாறுகளிடையே மண்டிக்கிடக்கின்றன. ஆனால் இன்றைய மூன்றும் உலக நாடுகளின் ஏகாதிபத்திய சுரண்டல் அமைப்பின் கீழ் நசுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தேசிய இனங்களின் விடுதலைக்கான போராட்டங்கள் இவற்றினின்றும் வேறுபட்ட பல பிரதான தன்மைகளைக் கொண்டுள்ளன. மூன்றும் உலக நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஏகாதிபத்தியங்களிற்கும் மக்களிற்கும் இடையிலான முரண்பாடே பிரதான காரணியாக அமைகிறது. நவகாலனிய நாடுகளில் மோசமான சகலவித சுரண்டல்களிலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டுவரும் ஏகாதிபத்தியங்கள் (அல்லது அவற்றின் சார்பு வல்லரசுகள்) தமக்கு சாதகமாக அந்நாடுகளின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த ஆளும் வர்க்கங்கள் (நிலப்பிரபுத்துவ தரகு முதலாளிய) ஏகாதிபத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யங்களிற்கு துணைபோகும் விதத்தில் தமது நாடுகளில் உள்ள அனைத்து மக்களுக்கும் எதிரான ஒடுக்கு முறைகளைச் செய்பவையாகவோ அல்லது அவற்றிற்கு ஒத்துழைப்பவையாகவோ செயல்பட்டு வருகின்றன; அத்துடன் தேசிய இனங்களின் விடுதலைக்கான குரலானது முன்னைய ஐரோப்பிய தேசிய விடுதலைப் போராட்டங்களைப் போலல்லாது முதலாளித்துவ வளர்ச்சி அடையாததன் காரணமாக பெரும்பாலும் நடுத்தர வர்க்க, குட்டி முதலாளிய வகுப்பினரின் குரலாகவே இருந்து வருகிறது.

ஏகாதிபத்தியச் சுரண்டலை எதிர்த்து நடாத்த வேண்டிய தேசிய விடுதலைப் போராட்டமானது, அந்நாடுகளைப்போல வளர்ச்சியுற்ற முதலாளித்துவத் தலைமையைக் கொண்டிருக்கும் சாத்தியத்தை இழந்து நிற்கிறது ஏனென்றால், ஏகாதிபத்திய சுரண்டலின் கீழ் உள்ள காலனிய உற்பத்தி முறையில் முதலாளித்துவ உற்பத்தி முறையானது தேசிய தன்மைகளுடன் பலமாக வளர்ச்சி பெறுதல் சாத்தியமில்லை. எனவே ஏகாதிபத்திய சார்பு கொண்ட தரகு முதலாளிய வர்க்கமும் ஆட்டியதிகாரத்தைத் தன் கையில் வைத்திருப்பதும், உலக வல்லரசுகளின் கொள்ளைக்காக நாட்டை அடைவு வைக்கத் தயாராக இருப்பதும் தேசிய முதலாளித்துவத் பலமாக வளரமுடியாமல் தடுத்து வைத்துள்ளது. இந்நிலையில் எந்த விதமான அடித்தளமுமற்ற நடுத்தர வர்க்கத்தினரின் குரலாக எழுப்பப்படும் (தேசிய முதலாளிய சாயலுடன்) குரல்களுக்குப் பலமான ஒரு அணி உருவாகுவதோ, அது சுயபலத்தில் போராடுவதோ சாத்தியமற்ற நிலையே நிலவுகிறது. ஒரு தேசிய இனம் தனது தேசிய உற்பத்தி முறைகளை வளர்த்துக் கொள்ளவும், முன்னேறவும் ஏகாதிபத்தியத்தின் திரையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதே பிரதானமானதாக அமைகிறது. இதன் காரணமாக தேசிய விடுதலை என்பது — ஏகாதிபத்தியங்களிலிருந்தான முழுமையான விடுதலையை வென்றெடுக்க தவிர்க்க முடியாமல் உறுதியான ஏகாதிபத்தி எதிர்ப்பாளனும், பலமானவனுமான ஒரு நண்பனைத் தனது தலைமை சக்தியாக கொண்டிருக்க வேண்டியுள்ளது. எனவே தேசிய விடுதலைப் போராட்டமானது மூன்றாம் உலக நாடுகளில் பாட்டாளிவர்க்கத் தன்மையிலான போராட்டமாக மட்டுமே அமைய முடியும் எனக் கூறப்படுகிறது.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான அனைத்து ஏகாதிபத்திய விரோத சக்திகளையும் அணிதிரட்டிய ஒரு போராட்டமாகவே இப்போராட்டம் அமைய முடியும். அதுவே உண்மையான தேசிய விடுதலையை வென்றெடுக்கும் சாத்தியத்தைக் கொண்டிருக்கும்.

ஆக முடிவாக, தேசிய விடுதலை என்பது, ஏகாதிபத்தியச் சுரண்டல்களிலிருந்தும், அதன் சார்பு ஆளும் வர்க்கங்களின் பிடியிலிருந்தும் முற்றாகத் தன்னை விடுவித்துக்கொள்வதே என்பது தெளிவாகிறது. இத் தேசிய விடுதலைப் போராட்டம், பாட்டாளி வர்க்க தலைமையிலான ஒரு போராட்டமாகவே அமைய முடியும் என்பதையும் பார்த்தோம்.



இனி, மகளிர் விடுதலைக்கு வருவோம்.

'' மகளிர் விடுதலை '' என்று கூறும்போது அது பலவிதமான அர்த்தங்களில் விளங்கிக்கொள்ளப்படும். ஆனால், அது எப்படி கூறப்பட்டபோதும் '' ஆணாதிக்க ''த்திலிருந்தான விடுதலையை முக்கியமான அம்சமாக குறிப்பிடப்படுகிறது. '' ஆணாதிக்க '' முறையிலிருந்து பெண்கள் விடுவிக்கப்படுவது பற்றிய கருத்துக்களை ஒட்டி, சீர்திருத்தவாதிகள், புரட்சியாளர்கள் என்ற இரு வகுப்பினரை நாம் இனங்கண்டு கொள்ளலாம். இதைவிட இன்னொரு பகுதியினரையும் நாம் காணலாம். அவர்கள் '' பெண்ணடிமைத்தனம் '' பற்றியும் அதற்கெதிராக நடக்கின்ற போராட்டங்களைப் பற்றியும் அக்கறைப்படாத அல்லது எதிர்க்கிறவர்கள்; இவர்கள் பற்றி நாம் இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. இவர்கள், இந்த அடிமைத் தனத்தின் காவலர்கள்; எதிர்ப்போக்காளர்கள். ஆனால் இந்த மற்றைய இரு சாராரும் பெண் விடுதலை பற்றி இரு வேறு பிரதான ஆனால் முரணான கருத்துகளைக் கொண்டுள்ளனர்;

இந்த இரு சாராருமே, ஆண்களின் மேலாதிக்கத்தை வெறுப்பவர்களாயும் அதிலிருந்து விடுபட விரும்புபவர்களாயும் இருக்கிறார்கள்.

இதில் முதலாவது பிரிவினராகிய சீர்திருத்தவாதிகள்பற்றி முதலில் பார்ப்போம். இவர்கள் ஆண்களின் அதிகாரப் போக்கை, பெண்கள் அடிமைப் படுத்தப்படுவதை, வெற்று 'மனமாற்றப் பிரச்சாரம்' மூலம் மாற்றலாம் எனக் கருதுபவர்கள். இந்த பெண்களின் மீதான ஒடுக்கு முறைக்குக் காரணமான அடிப்படை எங்குள்ளது என்று இவர்கள் தேடுவது கிடையாது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் எதிராக, அதை எதிர்த்துப் 'போராடவும்' அதன் மூலம் உரிமைகளை '' வென்றெடுக்கவும் '' முயல்பவர்களாக இவர்கள் உள்ளனர். ஆண்களின் ஆதிக்க மனோபாவம் அவர்களிடம் ஊறிப்போயுள்ள ஒரு ' கெட்ட ' குறையெனவும் அதை மாற்ற — இந்த சமூக அமைப்புக்குள்ளேயே- முடியுமெனவும் இவர்கள் நினைக்கிறார்கள். இந்த சமூக அமைப்பினை ஏற்றுக்கொண்டு, அதனுள் மாற 'உரிமைகளுடன்' வாழ்வதற்கான 'போராட்டங்களில்' ஈடுபட இவர்கள் முற்படுகிறார்கள். இத்தகைய ''சீர்திருத்த'' வாதிகளை நாம் சமரசவாதிகள் எனவும் நாம் அழைக்கலாம்;

இரண்டவது பிரிவினர், இந்த ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கான சமூக அடித்தளம் பற்றிய பிரக்ஞை கொண்டவர்கள்; இந்த சுரண்டல் சமூக அமைப்பின் காரணமாக, அதை பேணிப்பாதுகாக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கப்பட்ட சமூக ஒழுக்கங்களும் பிற கலாச்சார பண்பாட்டு வடிவங்களுமே இந்த ஆணாதிக்க முறைமையின் அடிப்படை என புரிந்து கொண்டவர்கள்; அதன் காரணமாக, அடிப்படை சமூக அமைப்பை மாற்றுவதும் வர்க்கபேதமற்ற, சுரண்டல் அற்ற ஒரு சமூக அமைப்பினை நிறுவுவதும் ஒரு தவிர்க்கமுடியாத முன் நிபந்தனை என்பதை உணர்ந்துள்ளவர்கள்; எனவே எத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகளும், முழுமையான விடுதலையை நல்காது எனத் தெரிந்து கொண்டுள்ளார்கள்; எத்தகைய 'சமரச' த்திற்கும் இடங் கொடாது போராடுவதில் உறுதியாக உள்ளவர்கள் 'இவர்கள்!'

இவர்கள் இந்தச் சமூக அமைப்பை மாற்றுவதன் மூலமாக ஒரு பொதுவுடமை சமூக அமைப்பினை நிறுவுவதன் மூலமாக மட்டுமே பெண் விடுதலை சாத்தியம் என்று உணர்ந்துள்ளதால், அதை மாற்றி அமைப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடுதல் அவசியமாகும். சமூகமாற்றம் என்னும் போது, அது இன்றைய பிற்போக்குச் சமூக அமைப்பினதும், அதன் ஆளும் வர்க்கத்தினதும் (அரசியல்) அதிகாரங்களை உழைக்கும் மக்கள் தலைமையிலான பரந்துபட்ட மக்கள் பறித்தெடுத்துக் கொள்ளுதலின் மூலமே சாத்தியமாகும். ஆட்சியதிகாரம் இல்லாவிடில் அனைத்தும் மாயையே என்பதை உணர்ந்து கொண்டு ஆட்சியதிகாரத்தை மக்களது கையில் எடுத்துக் கொள்வதற்காகப் போராடுவதை வலியுறுத்தும் இப்பிரிவினர், அதற்கான போராட்டங்களுடன் தம்மை, ஐக்கியப்படுத்திக் கொள்வர்.

பெண்களின் 'விடுதலையானது ஒரு பொதுவுடமை சமுதாய அமைப்பு நிறுவப்படலிலேயே சாத்தியமாகும் என்பதால், பெண்களது போராட்டம், அந்த இலட்சியத்தை நோக்கியதாகவே அமைய முடியும். இந்தச் சமூக அமைப்பைத் தகர்த்தெறியவும், ஒரு சுரண்டலற்ற பொதுவுடமை சமூக அமைப்பை அமைக்கவும் போராடும் பரந்துபட்ட மக்களுடன் ஐக்கியப்படுவதன் மூலமே பெண்கள் அதன் வெற்றியை நோக்கி துரிதப்படுத்துவதுடன் தமது வெற்றியினையும் சாதிக்கவும் முடியும்.

இனி அடுத்த விசயத்திற்கு வருவோம்.

தேசிய விடுதலைப்போராட்டம் பாட்டாளிவர்க்க தலைமையிலேயே சாத்தியம் என்பதை இந்த மூன்றும் உலக நாடுகளுக்குரிய தவிர்க்க முடியாத தன்மை என்று பார்த்தோம். இந்த தலைமையிலான இத் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு சுரண்டலற்ற, வர்க்க பேதமற்ற பொதுவுடமை சமுதாயத்தினை நோக்கிச் செல்லும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கில் ஒரு கட்டம் என்பதை இப்போது நாம் விளங்கிக்கொள்ள முடியும். பாட்டாளி வர்க்கம் (தனது சர்வதேசிய கடமையை நிறைவேற்றும் ஒரு

[17ம் பக்கம் பார்க்க



# காதல் பற்றிய மூன்று கவிதைகள்

இந்திரஜித்

ஒன்று

உன்னோடு கூடவரவே
விருப்பம் உண்டெனக்கு,
உனக்கு முன்னால் நடந்துபோக
என்றுமே நான் விரும்பியதில்லை.

சமாந்தரமாய் கைகளைக் கோர்த்தபடி
நடந்து செல்லவே
நான் ஆசைப்படுகிறேன்.

எனக்கு தேவையானதெல்லாம்
என்னைப் பற்றிய புரிந்து கொள்ளலே
பிறகே,
மற்றவையெல்லாம்.

நான் வெகுதொலைவு
போகவேண்டியுளது,
விரைவாய் நீட்டு உன்கரங்களை......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு

ஈச்சையும் பன்னையும் மண்டிக்கிடக்கும்
சுடலையின் பின்புறம்
எதிர்பாராமல் சந்தித்தோம்.

என்னைக் கண்டதும் கண்கள் விரிந்தது'
மெதுவாக
ஸைக்கிளை நிறுத்தினாய்.
மழைகள் முடிந்து படர்ந்து கிடக்கும்
பச்சைப் பின்னணியில் —
நல்லதொரு கவிதையைப் படிப்பது போல் —
சிவந்து நிற்கிறாய்!

மூன்று

தடை உடைக்க முடியாது
தடம் அழித்துச் செல்கின்றாய்,
உறவுடைக்க முடியாது
வேலிகளுள்
'குந்து'கிறாய்

பச்சையாய் விரிந்து கிடக்கும்
சுடலைப்புறமும்,
ஆட்கள் வராத ரீச்சர் வீட்டின்
முன்புறமும்,



ரியூற்றறி எனவும்
நாங்கள் 'சல்லாபித்தது' எல்லாம்
நேற்றெனவே
எல்லாம் உருக்குலைந்து போயிற்று.

நான் இருக்கும் 'வெளி'க்கு வருவதற்கு
வேலிகளை உன்னால்
மீறமுடியும் என்றிருந்தேன்.

உன்னைப்போலிருக்கும் எமது பெண்கள்
அனைவருக்கும்
உரத்த குரலில் சொல்ல விரும்புகிறேன்:
"தீமூட்டுங்கள்,
வேலிகளை அத் தீயில் எரியுங்கள்;
பிறகு,
நாங்கள் இருக்கும் வெளிகளுக்கு
வாருங்கள்!"

'பிரிவு துயர்மிக்கது'
என்பதை நானும் அறிவேன்.
ப்ரிய ராஜீ,
அந்நியரிடம் நசிபடுவதைவிட
இத்துயர் சிறிதே
அறிக நீ!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழிப்போக்கன்

# பெண் விடுதலை தொடர்பாக சில அனுபவக் குறிப்புகள்

முதலிலே சொல்லிவிட வேண்டும் !

எனக்கு அவ்வளவாக எழுத வராது. சின்ன வயதிலிருந்தே எனக்கும் அந்தத் துறைக்கும் அவ்வளவாக ஒத்துப்போவது கிடையாது. பள்ளிக்கூடத்தில் பல தடவைகள் கட்டுரை எழுத 'முயன்று' ஆசிரியர்களிடம் பலமான திட்டுக்கள் வாங்கியிருக்கிறேன். எனவே வாசகர்கள் எனது இந்தக் குறிப்புகளைப் பார்த்து கோபப்பட வேண்டாம்;

சக்திக்கு 'கட்டுரை' எழுதும்படி கேட்டபோது, எனக்கு எதை எழுதுவதென்று புரியவில்லை. இது 'பெண்களின் விடுதலைக்குரலாக' வெளிவரப்போகும் பத்திரிகை என்பதால், அது பற்றிய எனது கருத்துகளை சொல்லலாம் தான். ஆனால் எனக்கு கட்டுரை எழுத வராதென்பதால் எனது அனுபவங்களைக் குறிப்புகளாக தருகிறேன். உங்களுக்கு பிடிக்காவிட்டால் சொல்லுங்கள்......... விட்டு விடுகிறேன்......

## 1

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு.

நானும், பெண் விடுதலைபற்றிப் பேசுகிற இன்னுமிரண்டு 'பெண் தோழர்களுமாக பேசிக்கொண்டிருந்தோம். பலவிதமான பேச்சுகளின் நடுவில் 'கற்பு' பற்றிய பேச்சும் வந்தது.

நாம் பேசிக் கொண்டிருந்த இடம் ஒரு கிராமத்துப் பண்ணை. அங்கு ஒரு 'அப்பு' இருந்தார். இவர் பழந்தமிழ் இலக்கியங்களில் நிறைய ஈடுபாடுள்ளவர். பெண் விடுதலை, பெண்களுக்கு சமத்துவம் என்ற விசயம் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததைக்கேட்ட 'அப்பு' பொறுக்கமுடியாமல் பெண்களுக்கு விடுதலை என்று கேட்பது மிகவும் மோசமான விசயம் என்று சாடினார். பெண் ஆணுக்கு அடங்கி நடப்பதுதான் மனித இயற்கை என்றும் விவாதித்தார். அவர் திருக்குறளிலிருந்து உதாரணங்களும் காட்டினார். எனக்குக் குறளுடன் அவ்வளவு பரிச்சயம் இல்லைத் தான்.

ஆனால் 'கற்பு' பெண்களுக்கு மட்டும் சொந்தமானதாகவும் அது ஆண்களுக்கு அவசியமற்றதாகவும் கருதப்படுவது ஏன்? பெண்களுக்கு மட்டும் அது வலியுறுத்திப் பேசப்படுவது, நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் தன்மை காரணமாகவே, அதன் கலாச்சார இயல்புகள் காரணமாகவே என்று நான் அடித்துக் கூறினேன்.



பொதுவுடமை சமூக அமைப்பிலேயே பெண்கள் மீதான ஆணாதிக்க தன்மை அழிந்துவிடும் என்று குறிப்பிட்டேன். நீண்டநேரம் விவாதித்தும், தனது கருத்தை உறுதிசெய்ய முடியாமல்போகவே, என்னை மடக்கிவிடும் நோக்குடன் திடீரென்று கேட்டார் அப்பு: "எல்லாம சோசவிசம், சமத்துவம் என்று சொல்கிறாய் !, அப்ப உன்ரை மனுசியையும் பொதுவுடமையாக்கி விடுவாயோ ....?"

பெண்களைப் பொதுவுடமையாக்குவது என்று பிளேட்டோ தனது "குடியரசு" என்ற புத்தகத்தில் எழுதியிருந்ததை அப்பு நிச்சயம் படித்திருக்க மாட்டார், என்றாலும் கேட்கிறார். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. கூடவே, இந்தக் குரலின் பின்னாலிருந்த வர்க்கப்பார்வையும் தெளிவாகத் தெரிந்தது. இத்தகைய கேள்விகள் மாக்ஸ் காலத்திலேயே எழுப்பப்பட்டுள்ளன. இதற்கு அவர் கம்யூனிஸ்கட்சி அறிக்கையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் பதிலளித்திருந்தார் :

"முதலாளியாய் இருப்பவர் தனது மனைவியை வெறும் உற்பத்திக் கருவியாகவே பாவிக்கிறார். உற்பத்திக் கருவிகள் எல்லோருக்கும் பொதுவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படப்போவதாய்க் கேள்விப்பட்டதும், உடனே அவர் எல்லோருக்கும் பொதுவாகிவிடும். இதே கதிதான் பெண்களுக்கும் ஏற்படப்போகின்றதென்று இயற்கையாகவே முடிவு செய்துகொண்டுவிடுகிறார்".

பெண்களை சொத்துக்களாகவே மதிக்கும் சொத்துடமை சமுதாயத்தின் ஆண்கள், அவை சொத்துக்கள் என்பதால் இத்தகைய கேள்விகள் எழுப்பிவிடுகிறார்கள். சொத்துக்கள் சமூக உடமையாக்கப்படுதலை எப்படி சொத்துடமை சமூகம் எதிர்த்ததோ அவ்வாறே பெண் பற்றியும் இந்தக் 'கொச்சை'த்தனமான வியாக்கியானம் செய்து பெண் விடுதலையையும் எதிர்த்து வந்தது.

சொத்துடமை சமூகத்தின் (நிலவுடமை) குடும்ப உறவுகள் சொத்துக்களைப் பேணுவதினடியாகவே நிறுவப்பட்டுள்ளதாலேயே பெண்ணிற்கு அதிகமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எமது நாடுகளில் இது 'கற்பு' என்ற கலாச்சார வடிவம பெற்று, ஒரு இயல்பான ஒழுக்கமாக் போதிக்கப்பட்டது. எனவே, இது பற்றி உண்மைகளை விவாதிக்கையில், சொத்துடமை சமூக அமைப்பின் கலாச்சார வடிவங்களை ஏற்று அதற்கேற்ப வாழப் பழகிவிட்ட அப்பு இவ்வாறு கேட்டது எனக்கு வியப்பூட்டவில்லை.

சொத்துடமை சமுதாயத்தின் குடும்ப உறவில், அதன் கலாச்சார வடிவங்கள், ஆணாதிக்க அடக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையை வலுவூட்டும் விதத்தில், பெண் அடிமைத்தனத்தை இயல்பாகப் போதித்து வந்துள்ளன. இத்தகைய கலாச்சார வடிவங்களை மிகவும் மோசமாக, ஒடுக்கப்படும் மக்களையே அதை ஏற்றுக்கொள்ளச் செய்து விடுகின்றன. சமூகத்தின் வாய்ப்புக்களையும் வசதிகளையும் அனுபவிக்கும் ஆளும் வர்க்கத்தினரின் சார்பானதாகவே இத்தகைய கலாச்சார, பண்பாட்டு வடிவங்கள் அமைந்துள்ளன. எல்லாவகையான கலாச்சாரப் பண்பாடுகளுக்குப் பின்புறமும் ஒவ்வொரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கும்.

## 2

கொஞ்ச நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் ஒரு பெண் 'சமூகவிரோதி'க்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது. வேறும் சில பெண்கள் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின. எனது நண்பர் ஒருவரிடம் விசாரித்தேன். ஏதாவது 'காட்டிக் கொடுப்பு'களில் ஈடுபட்டவளா? என்பது எனது சந்தேகமாக இருந்தது. நண்பருக்கும் உண்மை தெரியவில்லை. அவளை ஒரு விபச்சாரி என்று குறிப்பிட்டார். விபச்சாரம் செய்வதும் ஒருவகை சமூகவிரோத செயலல்லவா? என்றும் கேட்டார் நண்பர்.

இத்துடன் எமது கதை திசை மாறிவிட்டது.

அந்தப்பெண் எதற்காகக் கொலை செய்யப்பட்டாள் என்பதை விடவும், ஒரு விபச்சாரி சமூக விரோதியா என்பது எமக்கு பிரதான பிரச்சனையாகி விட்டது.

விபச்சாரம் ஒரு சீரழிந்த வாழ்வு முறை என்பதில் எனக்கு ஒருபோதும் சந்தேகம் இல்லை. ஆனால் ஒரு பெண் விபச்சாரம் செய்ய வருவதற்கான காரணங்கள் என்ன என்பதை நாம் அவதானிக்க வேண்டும். இந்த சமூகத்தின் கட்டமைப்புக்குக்கீழ் வாழ முடியாது வேறு வழியின்றி விபச்சாரம் செய்கின்ற பெண்ணைப் பார்த்து, சமூக விரோதி என்று அழைக்க இந்த சமூகத்திற்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. அவளை வாழவைக்க முடியாத இந்த சமூக அமைப்பிற்கு அவளை குற்றம் சாட்ட மட்டும் எப்படி முடியும்?

விபச்சாரம் செய்தாள் என்ற குற்றச்சாட்டில் ஒருத்தியைக் கட்டிவைத்துக் கற்களால் எறிந்து கொல்ல ஆயத்தமானபோது யேசுநாதர் சொன்னதை ஞாபகப்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன்.

உங்களில் எவனொருவன் ஒரு பாவமும் செய்யாதவனோ அவன் முதலாவது கல்லை எறியட்டும்: அங்கு கல் எறிவதற்கு ஒருவருமே மிஞ்சவில்லை. இந்தச் சமூகத்தின் கட்டமைப்புக்களையும், அதன் கலாச்சார வடிவங்களையும் தூக்கி எறிந்து விட்டு, அவற்றை எதிர்த்துக் கொண்டு வீதியில் வந்து இறங்கிவிட்ட அவளை நாம் பாராட்ட வேண்டும். இந்த சமூக அமைப்பையும், அதன் சதிகார கலாச்சார வடிவங்களையும் எதிர்க்கத் துணிந்துதான் அவற்றின் கோர முகங்கள் மீது காறி உமிழ்ந்தபடிதான் அவள் வீதியில் இறங்கினாள்.



நேருக்குநேர் பார்த்து தயக்கமில்லாமல், ஒருவகை 'விடுதலை பெற்ற' உணர்வுடன் உள்ள பெண்களை யாழ்ப்பாணத்தில் காண வேண்டுமானால் சில விபச்சாரிகளைச் சந்தித்துப் பார்க்கலாம் என்று என்னுடைய நண்பரொருவர் முன்பே என்னிடம் கூறியிருக்கிறார்.

ஒருத்தி சமூகத்தின் விரோதியாக இருக்கவேண்டுமானால், அதற்காக அவள் அழிக்கப்பட வேண்டுமானால் அதற்கு இந்த சமூகம் உன்னதமான சமூகமாக அல்லவா இருக்க வேண்டும்! உண்மையில் அழிக்கப்பட வேண்டியது இந்த சமூக அமைப்பே தவிர சமூக விரோதிகள் அல்ல! ஞாபகம் இருக்கட்டும். இந்த சமூக அமைப்பை எதிர்ப்பவர்கள் சமூக விரோதிகள் என்றால் எல்லா 'புரட்சிக் கரரர்களும்' சமூக விரோதிகளே......!

விபச்சாரம் இன்னும் வாழவழியற்ற சில்லறை திருட்டுகளில் ஈடுபடல் போன்றவை உதிரிப் பாட்டாளிகளின் - ஒரு நெறிமுறையான ஒழுங்கான உற்பத்தி முறையோடு ஒட்டிய வாழ்வற்றவர்களின் - இயல்பாகும். இவர்களுடைய மோசமானநிலை இந்த சமூக அமைப்பால் இவர்களுக்குத் திணிக்கப்பட்ட ஒன்றேயன்றி வேறல்ல. இந்தக் கலாச்சார வடிவங்களுக்குள் சமரசம் செய்துகொண்டு, அதற்காக தற்கொலை செய்து கொள்ளும் கோழையாக அவள் போகாமல் இருப்பதே அவளையிட்டு நாம் 'கிளர்ச்சிக்காரி'க்குரிய மரியாதையுடன் அணுக வேண்டும் என்பதற்குப் போதுமான காரணமாகும்......?

நண்பர் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். ஒரு கசப்பான மருந்தை விழுங்குவதுபோல முகத்தைச் சுழித்து, பின் மெதுவாகப் புன்னகைத்தார். 'சரிதான்... ஆனால் விபச்சாரம் சரியென்று நீ நினைக்கயில்லை தானே?' கொஞ்சம் ஆதங்கத்துடன் அவர் கேட்ட போது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

'இல்லை... விபச்சாரியை ஒரு *Rebel* என்று தான் சொல்லுகிறேனே தவிர அவள் 'புரட்சிக்காரி' அல்ல! அவள் சமூகத்தை எதிர்த்து தனியே புறப்பட்டுவிட்டாள். அவள் தானும் தன்போன்ற கோடிக்கணக்கான பெண்களும் அனுபவித்துவரும் துன்ப துயரங்களைப்பற்றி சிந்தித்து அதற்கெதிராகவும், இந்த சமூகத்தை தகர்த்தெறியவும் புறப்பட வேண்டும். விபச்சாரம் செய்வது சீரழிவுத் தன்மையுடையது. அது அவளைச் சீரழித்துவிடும். ஆனால் அவள் இந்த விபச்சாரம் செய்ய வேண்டிய தன்மையை உருவாக்கும் சமூகத்தைத் தகர்த்தெறிய ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிப் போராட்டத்துடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டும்.. ... அதன் மூலமே அவள் தனது வாழ்வை உயர்த்தவும், தனது எதிர்ப்பைச் சரியாகக் காட்டவும் முடியும்......

நண்பருக்கு திருப்தி......

இந்த மட்டிலாவது இவள் 'விபச்சாரத்தை ஏற்றுக்கொள்ளவில்லையே' என்று யோசித்தார் போலும்.....

நான் அவருக்கு இன்னொரு குறிப்பையும் சொன்னேன். 'ஆந்திராவின் திகம்பரக் கவிகளின் கவிதைத் தொகுப்பு ஒன்றை - நடுநிசியில் ஒரு விபச்சாரி வெளியிட்டு வைத்தாள்; உனக்குத் தெரியுமா?'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[பின் அட்டைத் தொடர்ச்சி

தமிழ்ப் பெண்கள் சொந்த நாட்டிலேயே இப்படிக் கொலை செய்யப்பட்டு புதைகுழியில் புதைக்கப்படுவதற்கான காரணம் தான் என்ன? ஒருபுறம் இராணுவ வெறியாட்டம். மறுபுறம் இப்படிப் பெண்கள் கொலைகள். தமிழ்ச் சமூகத்திலிருந்துகூட பெண்களுக்குப் பாதுகாப்பு கிடையாதா?

இன்றைய நிலைமையில் பெண்களின் இந்த ஒநிக்கு முறைகளுக்காக யார் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.....?

பெண்களே...... பாரதத்தில் தான் மானம் காக்க கண்ணன் வந்தான். அது கதையில். நிஜவாழ்வில் அது நடக்கப்போவது கிடையாது. எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு இழைக்கப்படும் சகல ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து போர்க்கொடி உயர்த்துவோம்!

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!

---

மாதர்களை விடுதலை செய்யும் சட்டங்கள் எவ்வளவு இயற்றியிருந்த போதிலும், அவள் தொடர்ந்து வீட்டு அடிமையாகவே இருக்கிறாள். ஏனெனில், அற்ப வீட்டுவேலை அவளை நசுக்குகிறது, கழுத்தை நெரிக்கிறது, சோர்வேற்படுத்துகிறது, இழிவுபடுத்துகிறது, சமையலறையுடனும், குழந்தை வளர்ப்புடனும் அவளை தளையிடுகிறது; அவள் தனது உழைப்பைக் காட்டுமிராண்டித்தனமான முறையில் விளைபயனற்ற, அற்ப, சலிப்பேற்படுத்தும், சோர்வு ஏற்படுத்தும், ஒடுக்கும் உற்சாகமற்ற வீட்டு வேலைகளில் வீணடிக்கிறாள். இந்த நசசரிக்கும் வீட்டு வேலைகளுக்கு எதிராக முழுமூசான போராட்டம் (அரசு அதிகாரத்திலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில்), எங்கு, எப்பொழுது தொடங்கப்படுகிறதோ, அங்குதான், அப்பொழுதுதான், அல்லது அந்த வீட்டு வேலைகள் முழுக்க பெருவீத சோஷலிசப் பொருளாதாரமாக மாற்றப்படுவது துவங்கும்போதுதான் மாதர்களின் மெய்யான விடுதலை, மெய்யான கம்யூனிசம் தொடங்கும்.

— லெனின்

---

இச்சஞ்சிகை நகுலேஸ்வரர் வீதி, கருகம்பனை, கீரிமலையில் வதியும் செல்வி யு. அருட்பிரகாசம் அவர்களால் தெல்லிப்பழை குகன் அச்சகத்தில் பதிப்பித்து வெளியிடப்பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதைகுழி நடவடிக்கைகளை நிறுத்தப்போவது யார்?

அண்மையில் மணியந் தோட்டத்தில் ஆறு இளம் பெண்களின் சடலங்கள் புதைகுழியிலிருந்து அவ்வூர் மக்களால் மீட்டெடுக்கப்பட்டன.

பரவலாக அடிபடத்தொடங்கிய இந்தச் செய்தி கொடுத்த அதிர்ச்சியிலிருந்து மக்கள் மீள்வதற்கு முன்பாகவே 'ஆனைவிழுந்தானி'ல் இன்னொரு பத்துச் சடலங்கள்! அத்தனையும் தமிழ்ப் பெண்களின் சடலங்கள்!

அது மட்டுமா?

நீர்வேலி, சங்கானை, அளவெட்டி, தையிட்டி என்று ஆங்காங்கே பெண்களின் சடலங்கள் புதிது புதிதாக முளைத்துவிடுகின்றன.

தமிழ்ப்பகுதி இன்று சபிக்கப்பட்ட பிரதேசமாக, அரச இராணுவத்தினது கட்டுப்பாட்டில் ஒரு கைப்பற்றப்பட்ட பூமிக்குரிய நிலையில் வாழ்கின்றது. இதன் நாளாந்த நடவடிக்கைகள் பற்றி அறிபவர்கள் ஒரு லெபனனையோ வியட்னாமையோ ஞாபகப்படுத்திக் கொள்ளக்கூடும்.

இன்று இங்கு தமிழ் மக்களுக்கு நடைபெறும் இன்னல்களுக்குள் பெண்கள் வேறுவிதமான பல இம்சைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. வீடுகள் இராணுவத்தினால் சோதனையிடப்படும் வேளையில் அவர்கள் நடந்து கொள்ளும் முறைகள் எப்படிப்பட்டவை எவ்வளவு 'நாகரிக'மானவை என்பது எல்லோருக்கும் தெரியும். திருநெல்வேலிச் சம்பவங்கள் அதற்குள் மறந்துபோயிருக்க நியாயமில்லை.

ஆனால் லெபனனிலும் வியட்நாமிலும் நடைபெறாத ஒன்றும் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதுதான் இந்த 'புதைகுழிச் சம்பவங்கள்!'

[தொடர்ச்சி 32ம் பக்கம்

குகன் அச்சகம், தெல்லிப்பழை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்